ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ எல்லியும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# || எல்லியும் ||

ஆழ்வாரது துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டு திருமால்
திருக்கடித்தானத்தில் இருந்தமை கூறல்

‡எல்லியும் காலையும்⋆ தன்னை நினைந்தெழ⋆
நல்ல அருள்கள்⋆ நமக்கே தந்தருள்செய்வான்⋆
அல்லியந் தண்ணந் துழாய் முடி⋆ அப்பன் ஊர்⋆
செல்வர்கள் வாழும்⋆ திருக்கடித் தானமே (1)

திருக்கடித் தானமும்⋆ என்னுடைச் சிந்தையும்⋆
ஒருக்கடுத்துள்ளே⋆ உறையும் பிரான் கண்டீர்⋆
செருக் கடுத்து⋆ அன்று திகைத்த அரக்கரை⋆
உருக் கெட⋆ வாளி பொழிந்த ஒருவனே (2)

ஒருவர் இருவர் ஓர்⋆ மூவர் என நின்று⋆
உருவுகரந்து⋆ உள்ளுந்தோறும் தித்திப்பான்⋆
திருவமர் மார்வன்⋆ திருக்கடித்தானத்தை⋆
மருவியுறைகின்ற⋆ மாயப் பிரானே (3)

மாயப் பிரான்⋆ என வல்வினை மாய்ந்தற⋆
நேசத்தினால்⋆ நெஞ்சம் நாடு குடி கொண்டான்⋆
தேசத்தமரர்⋆ திருக்கடித்தானத்தை⋆
வாசப் பொழில்⋆ மன்னு கோயில் கொண்டானே (4)

கோயில் கொண்டான் தன்⋆ திருக்கடித்தானத்தை⋆
கோயில் கொண்டான்⋆ அதனோடும் என் நெஞ்சகம்⋆
கோயில்கொள்⋆ தெய்வம் எல்லாம் தொழ⋆
வைகுந்தம் கோயில் கொண்ட⋆ குடக்கூத்த அம்மானே (5)

கூத்த அம்மான்⋆ கொடியேன் இடர் முற்றவும்⋆
மாய்த்த அம்மான்⋆ மதுசூத அம்மான் உறை⋆

www.prapatti.com

பூத்த பொழில் தண்⋆ திருக்கடித்தானத்தை⋆
ஏத்த நில்லா⋆ குறிக்கொண்மின் இடரே (6)

கொண்மின் இடர் கெட⋆ உள்ளத்துக் கோவிந்தன்⋆
மண் விண் முழுதும்⋆ அளந்த ஒண் தாமரை⋆
மண்ணவர் தாம் தொழ⋆ வானவர் தாம் வந்து⋆
நண்ணு⋆ திருக்கடித்தான நகரே (7)

தான நகர்கள்⋆ தலைச்சிறந்தெங்கெங்கும்⋆
வானின் நிலம் கடல்⋆ முற்றும் எம்மாயற்கே⋆
ஆனவிடத்தும்⋆ என் நெஞ்சும் திருக்கடித்-
தான நகரும்⋆ தன தாயப் பதியே (8)

தாயப் பதிகள்⋆ தலைச்சிறந்தெங்கெங்கும்⋆
மாயத்தினால்⋆ மன்னி வீற்றிருந்தான் உறை⋆
தேசத்தமரர்⋆ திருக்கடித்தானத்துள்⋆
ஆயர்க்கதிபதி⋆ அற்புதன் தானே (9)

அற்புதன் நாராயணன்⋆ அரி வாமனன்⋆
நிற்பது மேவி⋆ இருப்பதென் நெஞ்சகம்⋆
நல் புகழ் வேதியர்⋆ நான்மறை நின்றதிர்⋆
கற்பகச் சோலைத்⋆ திருக்கடித்தானமே (10)

‡சோலைத் திருக்கடித்தானத்து⋆ உறை திரு-
மாலை⋆ மதிள் குருகூர்ச்⋆ சடகோபன் சொல்⋆
பாலோடமுதன்ன⋆ ஆயிரத்திப் பத்தும்⋆
மேலை வைகுந்தத்து⋆ இருத்தும் வியந்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com